# கவிதை எழுதுவதற்கு எந்தத் தடையும் இல்லை…

2019, ஜனவரி, 7-ஆம் தேதி தமிழ்த்துறையின் முத்தமிழ்ப்பேரவை சார்பில் கல்லூரியின் கலையரங்கில் கௌரவ விரிவுரையைக் கல்லூரித் தலைவர் முனைவர் அ.மு. சுவாமிநாதன் (இ.ஆ.ப., ஓய்வு) தலைமை ஏற்று நடத்தினார். தமிழ்த்தாய் வாழ்த்து ஆரம்பத்தில் ஒலிக்க, பெ. ஜெஸ்ரில் பாஸ்டினா இயற்றமிழில் கவிதை வாசித்தார். இசைத்தமிழுக்காகப் பாரதியார் பாடலைப் பாடினார் உதவியாளர் அ.பெ. சின்னசாமி (எ) உசிலை வேந்தன். பாரதியார் சுதந்திர தினத்தைக் கண்டிருந்தால் எப்படி மகிழ்ந்திருப்பார் என்பதை மையமாகக் கொண்ட நாடகத்தை உளவியல் மாணவர்களான கிருஷ்ணா வேங்கட்ராமன், ச. ஷில்பா, செ. சரண்யா ஆகியோரும் சமூகப்பணி மாணவர்களான மிக்கைல், தி. அதித்யா, ப. சந்தியா, ஏ. சுபாஷ் ஆகியோரும் சிறப்பாக நடித்தி எல்லோருடைய பாராட்டுதலைப் பெற்றனர்.




அன்பின் ஆறாமொழி, உளம் எனும் குமிழி, உறையும் மாயக் கனவு போன்ற பல நூல்கள் எழுதியுள்ள எழுத்தாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர் ஆகிய

பன்முகம் கொண்ட முபீன் சாதிகா புதுக்கவிதை குறித்து நல்லதொரு விரிவுரை நல்கினார். தமிழ்த்துறை ஏற்பாடு செய்த கௌரவ விரிவுரையில் தேசிய சர்வதேச மாநாடுகளில் பங்கேற்றுப் பெண்ணியம் குறித்தும் பின் நவீனத்துவம் குறித்தும் கட்டுரை வாசித்த இவர் நவீனக் கவிதைகளையும் தொட்டுக் காட்டினார். சாகித்திய அகாதெமியில் மொழிபெயர்ப்புப் பணியைத் திறம்படச் செய்திருப்பதால் தேவையான இடங்களில் ஆங்கில மொழியையும் கையாண்டு வெற்றி பெற்றார். நிகழ்ச்சியில் பங்கு பெற்ற இளம் அறிவியல் உளவியல் மாணவர்கள் சிறப்பு விருந்தினர் உரையாற்றும் போது செய்தி வாசிப்பாளரின் தொனி இருக்கிறது என்பதாக நினைத்தார்கள். அதற்குக் காரணம் இவர் செய்தி வாசிப்புக்கான பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறார் என்பதே.

சமீபத்தில் இலக்கிய வீதியின் அன்னம் விருது பெற்ற இவர் மாணவர்கள் கேள்விகளுக்கு ஆர்வத்துடன் பதிலளித்தார். மாணவர்களின் கலை நிகழ்ச்சி கூடுதல் சிறப்பு சேர்த்தது. ஆங்கிலப் பேராசிரியர் வி. ஐஸ்வர்யாவின் நன்றியுரை கூடுதல் அழகு சேர்த்தது.

